பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 02 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுதந்திரப் போராட்ட வீரர், வீர்சவார்கரின் துணிச்சல் தலைமுறைகளைக் கடந்து தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஊடுருவல் முயற்சிகளை முற்றிலும் தடுக்குமாறு எல்லைப் பாதுகாப்பு படையினரை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

3. செமிகண்டக்டர் உற்பத்தி துறையில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு செய்ய இருப்பதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. ராணுவத்திற்கு எதிராக கருத்து தெரிவித்ததாக கூறி தொடரப்பட்ட வழக்கில் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்திக்கு லக்னோ நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

5. ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் ஜஸ்பிரித் பும்ராவுக்கு பதிலாக ஹர்ஷித் ராணா சேர்க்கப்பட்டுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஃபிரான்ஸ் நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டின் **Marseille** நகரை சென்றடைந்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சுதந்திரப் போராட்ட வீரர், வீர்சாவர்கர் இந்த நகரத்தில் இருந்தபோதுதான் ஆங்கிலேயரின் பிடியில் இருந்து தப்புவதற்கான துணிச்சலான முடிவை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

வீர்சவார்கரை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கக்கூடாது என வலியுறுத்தியதற்காக அந்த காலகட்டத்தை சேர்ந்த **Marseille** நகர மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

வீர்சவார்கரின் துணிச்சல் தலைமுறைகளைக் கடந்து தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பகுதியில் திறக்கப்பட உள்ள இந்திய தூதரகம், இந்தியா - ஃபிரான்ஸ் மக்களிடையேயான பிணைப்புகளை வலுப்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முதலாவது மற்றும் இரண்டாவது உலகப் போர்களின்போது உயிர்நீத்த இந்திய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகவும் பிரதமர் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஃபிரான்ஸ் தலைநகர் பாரீசில் இந்தியா - ஃபிரான்ஸ் தொழில்துறை தலைமைச் செயல் அதிகாரிகளின் 14வது கூட்டத்தில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் நிலையான கொள்கைகள் காரணமாக உலகின் முதலீட்டு மையமாக இந்தியா உருவெடுத்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் இந்தியாவில் பொருளாதார ஆளுகையை மிகவும் நம்பிக்கையான மற்றும் திறமையானதாக மாற்றி இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு, எரிசக்தி, விமானப் போக்குவரத்து, விண்வெளி, நிதி தொழில்நுட்பம் மற்றும் சுகாதார சேவை துறைகளில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் ஃபிரான்ஸ் தொழில் நிறுவனங்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

குரு ரவிதாஸ் பிறந்தநாளை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில், தமது எழுத்துகள் மூலம் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்திய இந்தியாவின் தலைசிறந்த துறவி குரு ரவிதாஸ் என புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது கவிதைகள், சாதி, மதங்களைக் கடந்து மனிதகுல ஒற்றுமையை ஊக்குவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது தன்னலமற்ற சேவைகளை மனதில் கொண்டு சமுதாய வளர்ச்சி மற்றும் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற பாடுபடுவோம் என்றும் குடியரசுத்தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாட்டின் எல்லைப்புறப் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலம் ஊடுருவல் முயற்சிகளை முற்றிலும் தடுக்குமாறு எல்லைப் பாதுகாப்பு படையினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீர் பாதுகாப்பு நிலைமை குறித்து புதுதில்லியில் நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் படையினரும் தொடர்ந்து விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தினார்.

தீவிரவாதத்திற்கான நிதியுதவி, போதைப்பொருள் கடத்தல் குற்றங்களை தொடர்ந்து கண்காணிப்பதுடன், ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாதத்தை அறவே ஒழிக்க ஒருங்கிணைந்து பணியாற்றுமாறும் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

உலகின் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து திகழும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், உலக அளவில் நிச்சயமற்ற பொருளாதார சூழல் நிலவி வரும் வேளையில் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

அரசு வாங்கும் கடன் தொகையில் 99 சதவீதத்தை மூலதன செலவுகள் மற்றும் மூலதன சொத்துக்களை உருவாக்கவும்தான் பயன்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசின் மூலதன செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 புள்ளி 3 சதவீதமாகவும், நிதிப்பற்றாக்குறை 4 புள்ளி 4 சதவீதமாக உள்ளது என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கான தேவைகள் மற்றும் நிதி முன்னுரிமைகளை சமன் செய்வதாக உள்ளது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியாவின் செமிகண்டக்டர் உற்பத்தி துறையில் அமெரிக்காவைச் சேர்ந்த **Lam Research** நிறுவனம் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு செய்ய இருப்பதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த முதலீட்டு அறிவிப்பு, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் செமிகண்டக்டர் தொடர்பான தொலைநோக்கு பார்வை மீது சர்வதேச நிறுவனங்கள் கொண்டுள்ள நம்பிக்கையே காரணம் என்று கூறியுள்ளார்.

மத்திய அரசின் செமிகண்டக்டர் இயக்கத்தின் ஒரு பகுதியாக இத்தொழிலில் முதலீடு செய்ய வருமாறு சர்வதேச நிறுவனங்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ராணுவத்திற்கு எதிராக கருத்து தெரிவித்ததாக கூறி தொடரப்பட்ட வழக்கில் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்திக்கு உத்தரப்பிரதேச நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

கடந்த ஆண்டு அவர் மேற்கொண்ட பாரத ஒற்றமை யாத்திரையின்போது ராணுவத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதாகக் கூறி எல்லைப்புற சாலைகள் அமைப்பின் ஓய்வு பெற்ற இயக்குநர் திரு. உதய்சங்கர் ஸ்ரீவஸ்தவா இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

இதனை விசாரித்த லக்னோ கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிபதி திரு. அலோக் வர்மா, அடுத்த மாதம் 24ஆம் தேதி ராகுல் காந்தி விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.,,

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் மா பூர்ணிமா தினத்தை ஒட்டி இன்று லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இதையொட்டி உத்தரப்பிரதேச அரசு அங்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது.

31 நாட்களாக நடைபெற்று வரும் இந்த கும்பமேளாவில் இதுவரை 45 கோடியே 80 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடி இருப்பதாகவும், நேற்று ஒருநாளில் மட்டும் ஒரு கோடியே 9 லட்சத்திற்கும் அதிகமானோர் நீராடி இருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே கும்பமேளாவை ஒட்டி பிரயாக்ராஜில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி துப்புரவு தொழிலை மேற்கொள்ளப்படுவதாக உத்தரப்பிரதேச நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு. அம்ரித் அபிஜத் கூறியுள்ளார்.

சுமார் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தினம்தோறும் 15 மெட்ரிக் டன் அளவுக்கு மலர்கள் மற்றும் பாட்டில்கள் உள்ளிட்ட கழிவுகள் அகற்றப்பட்டு வருவதாகவும் திரு. அம்ரித் அபிஜத் கூறியுள்ளார்.

<<<>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சி புவி அரசியல் பிளவுகளை அதிகரிக்கச் செய்யும் அபாயம் உள்ளதாக ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் கவலை தெரிவித்துள்ளார்.

பாரீசில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இடையேயான இடைவெளியை குறைப்பதாக இருக்க வேண்டுமே தவிர அதிகரிப்பதாக அமையக்கூடாது என்றார்.

இந்தத் தொழில்நுட்பம் ஒருசிலரின் கைகளில் மட்டும் அதிகாரத்தை அளிப்பதாக இருக்கக்கூடாது என்றும், மிகுந்த பொறுப்புணர்வுடன் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

<<<>>>

எஃகு மற்றும் அலுமினியப் பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரியால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியுமாறு தென்கொரிய தொழில்துறையினரை அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்க அதிபர் திரு. ட்ரம்பின் வரி உயர்வு அறிவிப்பு உள்நாட்டு வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் கொரிய அரசு அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில், வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா காயம் காரணமாக இடம்பெறமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பதிலாக ஹர்ஷித் ராணா சேர்க்கப்பட்டுள்ளார். இந்த அணியில் வருண் சக்ரவர்த்தியும் இடம்பெற்றுள்ளார்.

--------------

உத்தராகண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் ட்ரிபிள் ஜம்ப் பிரிவில் தமிழ்நாட்டின் ப்ரவீன் சித்ரவேல் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர் வாள்வீச்சு **Sabre** பிரிவிலும் தமிழகத்தின் **Nidhi Gisho** தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

முன்னதாக டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவிலும் தமிழக வீரர்கள் தங்கம் வென்றனர்.

பதக்கப் பட்டியலில் சர்வீசஸ் அணி 54 தங்கம் உள்ளிட்ட 97 பதக்கங்களுடன் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

22 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலம் என 75 பதக்கங்களுடன் தமிழகம் 6ஆம் இடத்தில் உள்ளது.

**<<<<The end>>>>**